பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 14 சனிக்கிழமை 30.12.2023 கதிர் 414

# ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கும் யோசனை நடைமுறைக்கு மாறானது

## தமிழ் வேட்பாளர் போட்டியிடுவதன் மூலம் பயன்கள் அதிகம் என்கிறார் விக்னேஸ்வரன்

ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கக்கோரும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் யோசனை நடைமுறைக்கு மாறானது.புலிகள்இருந்தபோது, ஒரு புறக்கணிப்பின் வெற்றியை அவர்களால் கண்காணிக்க முடிந்தது. இப்போது வடக்கு, கிழக்கில் இராணுவம் சர்வ சாதாரணமாக உள்ளது. புறக்கணிப்பின் வெற்றியை கஜன்எவ்வாறுஉறுதிசெய்வார்? இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும்நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன். ☞2

## இது ரகசியம் அல்ல!

காலைக்கதிரின் தீவிர வாசகர் ஒருவர் நேற்று ஒரு மின் அஞ்சலை அனுப்பிவைத்திருந்தார். அரசியல் தொடர்பில் ஆழமாகத் தொடர்ந்து கலந்துரையாடி வருபவர் அவர். அவரது கருத்தை எந்த மாற்றமும் இன்றிஅப்படியேஇங்குதருகின்றேன்.

இன்றைய (நேற்று) காலைக்கதிர் பத்திரிகையில் மறைந்த புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் பற்றிய எவ்விதமானசெய்திகளோ கருத்துக் களோ இல்லாதது பற்றி ஆச்சரியமும் வருத்தமும் அடைந்தேன்.

1983 கலவரங்களின் பின் போராட்டம்வலுப்பெறத்தொடங்கிய காலகட்டத்தில் உண்மையாகவே ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்த மிகச் சில நடிகர்களில் விஜயகாந்தும் ஒருவர். குரல் ☞2

## தேவையான நிதிகள் அனைத்தும் விடுவிப்பு

நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட 2023 வரவு- செலவுத் திட்ட விதிகளுக்கு உட்பட்டு, 2023 டிசெம்பர் 15 வரை அனைத்து அரச நிறுவனங்களால் சான்றளிக்கப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளுக்கும் அவசியமான நிதியை விடுவிக்க திறைசேரி தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 25 ஆண்டுகளில் ஒரு வருடத்திற்குள் குறித்த ஆண்டிற்கான அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும்வழங்கப்பட் ☞8

## 72 குண்டுகள் முழங்க முழு அரச மரியாதையுடன் நடிகர் விஜயகாந்தின் பூதவுடல் நேற்று நல்லடக்கம்





தேமுதிக நிறுவனத் தலைவரும்,நடிகருமான விஜயகாந்தின் உடல் 72 குண்டுகள்முழங்கமுழு அரசு மரியாதையுடன் கோயம்பேட்டில் உள்ள கட்சி அலுவலகத்தில் நல்லடக்கம் செய்யப் பட்டது. இறுதிச் சடங்கில் விஜயகாந்தின் குடும்பத்தினர்,நெருங்கிய நட்பு வட்டம், தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின், இந்நாள், முன்னாள் அமைச்சர்கள், சில திரைப் பிரபலங்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, விஜய காந்தின் ☞2

## தமிழர் தாயகம் சிங்களவருடையது என்பதை ஏற்கவேண்டும் அல்லது வடக்கு கிழக்கு தமிழருடையது என ஏற்கவேண்டும்

### இனப்பிரச்சினை தீர இதுவே வழிகள் என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளை கைவிட்டு தாயகம் முழுவதும் சிங்களவர்களுடையது என ஏற்றுக்கொள்ளும் பட் சத்திலோஅல்லதுதெற்கு எப்படி எங்களுடைய தேசமோ அதேபோல் வடகிழக்கு தமிழ் தரப்பினருடையது என சிங்கள ஆதிக்கவாதிகள் ஏற்றுக்கொள்ளும் பட்டத்திலோதான் இனப்பிரச்சினைக்கு தீர்வு கொண்டுவர முடியும் என்ற தமிழ்த் தேசிய ☞9

## முகநூல் மோசடி குற்றச்சாட்டில் நெல்லியடியில் இருவர் கைது

### பெண் வேடமிட்டு ஏமாற்றினாராம்



முகநூலில் பெண் போல பேசி ஏமாற்றி நபரொருவரிடம் பணத்தைப் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் இருவர் நேற்று ☞2

## சம்பா அரசி விலை ஏன் அதிகரித்தது?

### நுகர்வோர் முன்னணி தலைவர் கேள்வி

வற்வரிஅதிகரிப்புக்கு முன்னரே கீரி சம்பாவின் விலை ஏன் அதிகரிக்கப்பட்டது என்றுதேசியநுகர்வோர் முன்னணியின்தலைவர் அலேச சம்பந்த் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனவரி முதலாம் திகதி முதல் வற்வரியை அதிகரிக்கவுள்ளதாக அறிவித்திருந்த போதிலும்,தற்போதேசில பொருட்களின்விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அவை எதன் அடிப்படையில் அதிகரிக்கப் பட்டுள்ளன என்பது கேள்விக்குரிய விடயமாகும். குறிப்பாக, நாட்டு மக்கள் பயன்படுத்தும் அரிசி உள்ளிட்ட பொருட்களின்விலைகள் அதிகரிக்கப்பட்டுள் ☞9

## கருத்துக்களை கேட்டறிந்த பின் தட்டமைத் தடுப்பு மருந்தேற்றல்

### சுகாதார அமைச்சின் செயலர் தெரிவிப்பு

உலக சுகாதார அமைப்பின் தெற்காசிய வலய மற்றும் ஜெனிவா அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொண்ட கலந்துரையாடல் தொடர்பாக துறைசார்ந்தவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து, ஆறு, ஒன்பது மாதங்களுக்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்கு தட்டம்மைத் தடுப்புமருந்துவழங்கும் விசேட நிகழ்ச்சியை நடைமுறைப்படுத் தவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் விசேடவைத்தியர்பாலித மஹிபால தெரிவித்தார்.

டெங்கு மற்றும் அம்மை நோய்களை ஒழிக்கும்வேலைத்திட்டம் தொடர்பாக தெளிவு படுத்தும் ஊடகவியலாளர்களுடனான விசேட சந்திப்பொன்று சுகாதார அமைச்சில் சுகாதார அமைச்சில் இடம்பெற்றது. இதன் போதே அமைச்சின் செயலாளர் ☞8

## ஒரு குடும்பத்துக்கான செலவு ஜனவரி முதல் ரூ. 40,000 அதிகரிக்கும் என்பது தவறாம்

ஒருகுடும்பத்திற்கான செலவுஜனவரிமாதத்தில் 40 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கும் என்று கூறுவது தவறு என ஜனாதிபதி அலுவலக அரசவருமானப்பிரிவின் பணிப்பாளர் கே. கே.ஐ. எரந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பெறுமதி சேர் வரி என்பது நமது நாட்டின் வருமானத்தை அதிகரிக்கும் காரணிகளில் பிரதானமானதாகும். 2023 ஆம் ஆண்டில் ஏயுவு வரி மூலம் 600 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான வருமானம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சுமார் 450 பில்லியன் மாத்திரமே பெறப்பட்டது.

2024 ஆம் ஆண்டிற்குவற்வரி ☞9

## மேலதிக வகுப்புகளுக்கு நள்ளிரவு முதல் தடை

உயர் தர பரீட்சைகளுக்கான மேலதிக வகுப்புகள் மற்றும் செயலமர்வுகளை முன்னெடுப்பதற்கு நேற்று நள்ளிரவு முதல் பரீட்சைகள் முடியும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அத்திணைக்களம்விடுத்துள்ள ஊடக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பரீட்சை தொடர்பான மாதிரிவினாத்தாள்களை வழங்குவதற்கும்இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் ஊடாக வெளியிடுவதற்கும்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் அல்லது குழுக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தோடு இம்முறை பொதுத்தராதர உயர்தரபரீட்சை ஜனவரி 4 முதல் 31 வரைநடைபெறவுள்ளது.

## எதிர்பார்ப்பைவிட 2023இல் அரச வருமானம் அதிகரிப்பு

### அறிவித்தார் வருமானப் பிரிவு பணிப்பாளர்

2023ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்டதைவிட அதிகவருமானம்அரசுக்குக்கிடைத்துள்ளதுஎன்று ஜனாதிபதிஅலுவலகத்தின் அரசவருமான பிரிவின் பணிப்பாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி,

ஜனாதிபதி ஊடக மையத்தில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில்அரசவருமானம் மூன்றுட்ரில்லியன்களை எட்டியுள்ளது. நாம் இவ்வருடத்தில் ☞2

## இதுவரை 18 ஆயிரம் பேர் கைது

'யுக்திய' சுற்றிவளைப்பில் இதுவரையான காலப்பகுதியில் 17,837 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டிசெம்பர் 17 முதல் நேற்று அதிகாலை 12.30 வரையான காலப்பகுதியில்இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

10 கிலோ 510 கிராம் ஹெரோயின், 06 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள், 288 கிலோகிராம் கஞ்சா, 118 கிலோ 50 கிராம் மாவா, 35 கிலோகிராம் ஏஷ் போதைப்பொருள் என்பனபொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

850சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், மேலும் 186 சந்தேக நபர்களிடம்சட்டவிரோத சொத்துகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ☞9

## இனி இது .....

கொடுத்தது மட்டுமல்லாமல் தானே முன்னின்று பல சத்தியாக்கிரக மற்றும் உண்ணாவிரதப் போராட்டங்களையும் நடத்தி உள்ளார்.

1984இல் போராளிகள் குழு ஒன்று தமிழ்நாட்டில் வீடு வீடாகவும், வியாபார மற்றும் தொழிற்சாலைகளுக்கும் சென்று போராட்டத்தை பற்றிய விளக்கங்களை அளித்துநிதிதிரட்டிய காலத்தில் ஒருநாள் விஜயகாந்த் வீட்டிற்கும்சென்றபோது அவர்களை அந்த நல்ல மனிதர் பேசவே விடவில்லை. இராயப்பேட்டை சத்யம் திரையரங்கில் 'ஊமை விழிகள்' படக்காட்சியின் ஒருநாள் வருமானத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று பெருந்தன்மையுடன்சொன்னாராம் அந்த வள்ளல்.

ஒற்றை ரூபாய்க்கும் உண்டியல் குலுக்கிய எங்களை தனது பரோபகாரத்தால் நெகிழ வைத்தார் என்று அந்த போராளிகள் பதிவு பண்ணி இருக்கிறார்கள். இதைவிட ஈழத்தமிழர் இன்னல் தீரும் வரை தனது பிறந்த நாளை கொண்டாட மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்தார். மேலும் தனது மூத்த புதல்வனுக்கு விஜய பிரபாகரன் என்று பெயர் சூட்டி தலைவரின் பால் இருந்த தனது அபிமானத்தை வெளிப்படுத்தினார்.

இதை விட இன்னும் பல நன்மைகளை ஈழத்தமிழர் நலனுக்காக செய்தவர் விஜயகாந்த். மற்றும் எல்லோரையும் சரிசமமாக நடத்தியவர்அவர். படப்பிடிப்புதளத்தில் அவருக்கு வழங்கப்படும் உணவு கடை நிலை ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என்று தயாரிப்பாளர்களுக்கு உத்தரவும் போட்டார். செலவு அதிகமாகும் என அவர்கள் தயங்கியபோது மேலதிக தொகையை தனது சம்பளத்தில் இருந்து பிடிக்கச் சொன்ன தாராளவாதி அவர்.

அவருக்கும் மறுபக்கம், முன்கோபம் போன்றவை உண்டு. அரசியலில் அவரது அபார வளர்ச்சியை கண்டு பயந்து பல வெளிக்குத்து மற்றும் உள்குத்துகளுக்கு ஆளாகியதால் கடந்த சில வருடங்களாக தனது சுய செயற்பாடுகளை தொடர்ந்து இழந்து வரும் நிலைக்கு தள்ளப்பட்டார் என்பதே உண்மை. ஒரு தரமான பத்திரிகையானகாலைக்கதிர்அவரது இறப்புச் செய்தியை இருட்டடிப்பு செய்தது எந்த வகையிலும் நியாயமாகாது. டெய்லிமிரர் பத்திரிகையில்கூட இந்த செய்தி வெளிவந்திருந்தது.

அதை விட மோசம் ஈழத் தமிழர்களின் தலைமையோ அல்லது இரண்டாம் நிலை (விலி உழியியிள-) தலைவர்களோகூட இரங்கல் தெரிவிக்கவில்லை. மனோ கணேசன் செந்தில் தொண்டமான் (நேரிலும்சென்றார்), ஈழவேந்தன் போன்றோர்கூட அஞ்சலி செலுத்தியும், இங்கிதம் தெரியாத, நன்றிகெட்டதலைமைகள் இறுமாப்பில்வாயைதிறக்கவில்லை. இவர்கள்தான் எங்களுக்கு தீர்வு வாங்கி கொடுப்பார்களாம்!

ஒன்று நிச்சயம். அடுத்த தேர்தலில் தென்னிலங்கையில் எவ்வாறு ரணில் ராஜபக்ச கூட்டம் மண்கவ்வப் போகிறதோ அதே நிலைதான் இந்த உருப்படாத தமிழ்தலைமைகளுக்கும் நடக்கும் என்பது திண்ணம்.

என். விஜேன்.

இந்தக் கருத்துக்கள் அந்த வாசகரின் சொந்தக் கருத்துக்கள் மட்டுமே. ஈழத் தமிழர்கள்பால் எப்போதும் அன்பும் ஆதரவும் கொண்டவர் கப்டன் விஜயகாந்த். அவரது பிரிவு வலி தருவது. இட்டுநிரப்ப முடியாத இடைவெளி. அவரைப் போன்ற மிகச் சில நடிகர்கள்தான்தமிழ்இனவுணர்வும் ஈழத் தமிழர்கள்பால் பற்றும் கொண்டவர்களாக இருந்தார்கள்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித்தேர்தலில்தமிழ்பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவான நடவடிக்கை என்றும் அந்தத் தேர்தலைத்தமிழர்கள்புறக்கணிக்க வேண்டும்என்றும்கஜேந்திரகுமார் மட்டக்களப்பில் தெரிவித்திருந்தார். அது தொடர்பில் கேள்வி பதில் வடிவத்தில் விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேலும், சிங்கள தேசிய கட்சிகளுக்கு நெருக்கமாக இங்குள்ள கட்சிகளும் தேசியக் கட்சிகளைச் சேர்ந்த தமிழர்களும் வாக்களிக்கச்செல்வதைஒருபோதும் தடுக்க முடியாது. புறக்கணிப்பை பரிந்துரைப்பதன் மூலம் கஜன் ஒரு சிங்கள வேட்பாளருக்கு ஆதரவு வழங்க விரும்புகிறாரா?

ஏற்கனவே கடந்த பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் வாக்கு எண்ணிக்கையில் பல தவறுகள் நடந்ததாகக் கூறப்பட்டது. இந்தப் பின்னணியில் புறக்கணிப்பு நடந்தால் என்ன செய்ய முடியாது? வாக்காளர்கள் வீட்டில் இருக்கும்போதே அவர்களின் வாக்குகள் பதிவாகும்.

தேர்தலின்போது தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து எந்த விவாதமும் நடைபெறுவதை புறக்கணிப்பு உறுதி செய்யாது. புறக்கணிப்பினால் மிக மோசான (குறைவான) வாக்குப் பதிவே இடம்பெற்றதாகச் செய்தித்தாள்கள் தெரிவிக்கும் அல்லது மத்திய அரசு அதன் இராணுவம் உள்ளிட்ட தனக்கு நெருக்கமான தரப்புக்கள் ஊடாக மிகச் சிறந்த முறையில் செயற்பட்டால், தமிழர்கள் வீடுகளில் தங்கியிருந்து புறக்கணிக்கப்பதாக அறிவிக்கப்பட்டபோது கணிசமான வாக்குப்பதிவு நடந்ததாகச் செய்தித் தாள்கள் மறுநாள் கூறும்.

மறுபுறம், பொன்னம்பலம் போன்ற மூன்று மொழிகளையும் அறிந்த ஒரு பொது தமிழ் வேட்பாளரால் தமிழர்களுக்கு அளப்பரிய சேவைகளைச் செய்ய முடியும். வாக்காளர்களிடையே ஆள்மாறாட்டம் குறைக்கப்படலாம். தேர்தலில் வாக்காளர்களின் சுறுசுறுப்பான பங்கேற்பை உறுதிசெய்து, அதனை அதிகரிக்கலாம். தமிழர்களின் சோதனைகள்மற்றும்இன்னல்களை வெளிப்படுத்துவதற்கானமேடைகள் கிடைக்கப்பெறும். அதேவேளையில், வாக்காளர்கள் மத்தியில் நமது அரசியல் நிலைப்பாடு பற்றிய கூடுதல் புரிதலை உறுதி செய்ய முடியும்.

ஜனாதிபதித்தேர்தலில்பங்குபெறும் பொது வேட்பாளர் மூன்று மொழிகளையும் அறிந்திருப்பதன் முக்கிய நன்மைகளில் ஒன்று ஒவ்வொரு வேட்பாளருக்கும் வழங்கப்படும் தொலைக்காட்சி நேரத்தைப் பயன்படுத்துவதாகும். இன்று சிங்கள மொழிப் பத்திரிக்கைகளோ ஊடகங்களோ தமிழர்களின் குறிப்பாக வடக்கு கிழக்கின் பிரச்சினைகளையோ கருத்துக்களையோ வெளியிடுவதில்லை. ஆங்கிலப் பத்திரிக்கைகள் கூட எங்களின் பிரச்சனைகளை மிகவும் கஞ்சத்தனமாகவே செய்தியாக்குகின்றன.

ஜனாதிபதி வேட்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் தொலைக்காட்சி நேரத்தை தமிழ் பொது வேட்பாளர் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதன் மூலம் சிங்களவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் எமது பிரச்சினைகளை தெளிவுபடுத்த முடியும். இங்குள்ள இராஜதந்திர தூதரகங்கள் உட்பட சர்வதேச சமூகத்திடம்கூட வடக்கு மற்றும் கிழக்கின் களநிலமை பற்றிக் கூற முடியும்.

இறுதியாக எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் 50% வாக்குகளைப் பெறுவதை பொதுத் தமிழ் வேட்பாளரால் தடுக்க முடியும். தமிழ்வேட்பாளருக்குசிங்களவர்கள் பலரும்கூட தமது விருப்பு வாக்குகளை வழங்கலாம்.

எனவே எமது பிரச்சினைகளை உலகிற்குஎடுத்துரைக்கஒருபொதுத் தமிழ் வேட்பாளர் முன்வைக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

கடைசியாக கஜன் பொது தமிழ் வேட்பாளராக போட்டியிட விரும்பினால் எனது வாக்கு அவருக்கே செல்லும்! ஆனால், தமிழர்களின் பிரச்சனைகள் பற்றி எமது சிங்கள சகோதரர்களுக்குப் புரியவைக்கும் வகையில் அவர் தொலைக்காட்சி உரை ஒன்றை சிங்களத்தில் வழங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

## முகநூல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெல்லியடி பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் யாழ்ப்பாணம் - நெல்லியடியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலையைச்சேர்ந்த ஒருவருடன் நெல்லியடியைச் சேர்ந்த ஒருவர் முகநூலில் பெண் போல வேடமிட்டுப் பழகி காதல் வலையில் வீழ்த்தி நெல்லியடிக்கு வரவழைத்துள்ளார்.

இதனை நம்பி நெல்லியடிக்கு வந்த திருகோணமலை வாசியை கத்தி முனையில் அச்சுறுத்தி அவரிடமிருந்த பணம் மற்றும் உடைமைகளை இருவர் கொள்ளையடித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக திருகோணமலை வாசி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தார்.

விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் இருவரை கைது செய்ததுடன் கொள்ளையடித்துச் செல்லப்பட்ட பணம் உடமைகளையும் மீட்டன.

## எதிர்பார்ப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2850 மில்லின்களை மட்டுமே வருமானமாக ஈட்ட முடியும் என கணித்திருந்தோம். தற்போதும்அந்த இலக்கை கடந்துச் சென்றுள்ளோம்.

இருப்பினும் 2023 இல் அரசினால் விதிக்கப்பட்ட வரி மக்களுக்குச் சுமையை ஏற்படுத்தியிருந்தாலும் மக்களுக்கு அவசியமான அனைத்துச் சேவைகளையும் தட்டுப்பாடின்றி வழங்க எதிர்பார்க்கிறோம். எவரேனும்ஒருவர்அசாதாரணமாக பொருட்களின்விலையைஅதிகமாக விற்பனை செய்யும் பட்சத்தில் அரசும்மக்களும்இணைந்துஉரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இயலுமையும் உள்ளது.

மற்றைய நாடுகளின் மொத்த தேசிய உற்பத்திக்கு நிகராக 6-8சதவீதத்தினால் வரியும் அதிகரிக்கப்படுகிறது. ஆனால் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு நிகராக இவ்வருடத்தில் 2.2சதவீதமாகவே வற் வரி அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. 2024 மொத்த தேசிய உற்பத்திக்கு இணையாக4சதவீதவரிவருமானம் கிடைக்கும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும் அது போதுமான அளவாக அமையாது. அதனால் பொருளாதார செயற்பாடுகளை சரியான முறையில்முன்னெடுக்கும் நீண்டகால பொறிமுறையொன்று அவசியப்படுகிறது. அதனால் 2024 வரவு செலவு திட்டத்தின் ஊடாக டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

## 72 குண்டுகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்த அலைகடலெனத் திரண்டு வந்த மக்களின் எண்ணிக்கை அதிகரித்ததால் அவரது உடல் தீவுத்திடலில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கிருந்து பிற்பகல் 2 மணிக்கு அவரது இறுதி ஊர்வலம் கோயம்பேடு நோக்கிப் புறப்பட்டது. இந்த இறுதி ஊர்வலத்திலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு கண்ணீருடன் தங்கள் கேப்டனுக்கு பிரியாவிடை கொடுத்தனர்.

தீவுத்திடலில்இருந்துகோயம்பேடு தேமுதிகஅலுவலகத்துக்குகொண்டு வரப்பட்ட விஜயகாந்தின் உடலுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார்.

தேமுதிக அலுவ லகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்ட விஜயகாந்தின் உடல் சந்தனப் பேழையில் வைக்கப்பட்டிருந்தது. இதற்காக 50 கிலோ எடை கொண்ட பிரத்யேக சந்தனப் பேழை தயார் செய்யப்பட்டிருந்தது. அந்த சந்தனப் பேழை யின் ஒருபுறத்தில் 'புரட்சிக் கலைஞர் கேப்டன் விஜயகாந்த்' என்கிற வாசகமும், நிறுவனத் தலைவர், தேசிய முற்போக்கு திராவிட கழகம் என்கிற வாசகமும் பொறிக்கப்பட்டிருந்தன.

அதேபோல் அவரின் பிறப்பு மற்றும் இறப்பு தேதிகளும் இடம்பெற்றிருந்தன. சந்தனப் பேழையின் மற்றொரு பக்கத்தில் 'கேப்டன்' என்றும் பொறிக்கப்பட்டிருந்தது. அந்த சந்தனப் பேழையில் வைக்கப்பட்ட உடல்அடக்கம்செய்யப்படுவதற்காக குழிக்குள் இறக்கப்பட்டபோது உறவுகளும், நண்பர்களும், தொண்டர்களும் கதறி அழும் காட்சி காண்போரை கண்கலங்கச் செய்தது.

முன்னதாக, விஜயகாந்தின் உடல் தீவுத்திடல் மைதானத்தில் அஞ்சலிக்காகஇன்றுவைக்கப்பட்டது. மக்கள் அஞ்சலி செலுத்தி சென்று திரும்ப ஏதுவாக பாதைகள் அமைக்கப்பட்டன. இதனால் மக்கள் திரளாக வந்து அஞ்சலி செலுத்தினர். பாதுகாப்புப் பணியில் ஆயிரக்கணக்கான பொலிஸார் ஈடுபட்டனர்.

பின்னர், தீவுத்திடலில் தொடங்கிய இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும், பொதுமக்களும், ரசிகர்களும் கலந்துகொண்டு கண்ணீருடன் பிரியாவிடை அளித்தனர். தீவுத்திடலில் இருந்து கோயம்பேடு வரையிலான இறுதி ஊர்வலம் முழுவதுமே மக்கள் வெள்ளத்தாலும், அவர்களின் கண்ணீராலும் நிரம்பின.

வியாழக்கிழமை அதிகாலை 6.30 மணியளவில் விஜயகாந்த் உயிரிழந்தார். அவரது உடல் சாலி கிராமத்தில் உள்ள அவரது வீட்டுக்குக்கொண்டுசெல்லப்பட்டது. அங்கே அவரது உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின், மூத்த அமைச்சர்கள் அஞ்சலி செலுத்த அங்கிருந்து உடல் சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக அலுவலகத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுபொதுமக்கள் அஞ்சலிக்காகவைக்கப்பட்டது. விடிய விடிய தொண்டர்கள், ரசிகர்கள் அஞ்சலி செலுத்தினர். முறையான ஏற்பாடுகள் இல்லாததால் அஞ்சலி செலுத்துவதில் சிரமம் ஏற்பட்டது. அதையடுத்துசென்னைதீவுத்திடலில் விஜயகாந்த் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

தீவுத்திடலில் நேற்றுக் காலை விடிந்ததில் இருந்தே திரைப் பிரபலங்களும், அரசியல் பிரமுகர்களும் அஞ்சலி செலுத்திவந்தனர். மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார். நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன் ஆகியோரும் இன்று அஞ்சலி செலுத்தினர். அரசியல்தலைவர்கள், திரைப் பிரபலங்களுடன் லட்சக்கணக்கான மக்களும் விஜயகாந்த் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், பிற்பகலில் விஜயகாந்தின் உடல் ஊர்வலமாக தேமுதிக அலுவலகம் கொண்டுவரப்பட்டபோது

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# புரட்சிக் கலைஞர் விஜயகாந்துக்கு யாழ்ப்பாணத்தில் கண்ணீர் அஞ்சலி




தேமுதிக தலைவரும், நடிகருமான 'புரட்சி கலைஞர்' விஜயகாந்த்' கொரோனாத் தொற்றுக்கு சிகிச்சைபெற்றுவந்தநிலையில்வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது மரணமானது தமிழக மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ள நிலையில், அரசியல் பிரபலங்களும், திரைப்பிரபலங்களும் தமது ஆழ்ந்த இரங்கலை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் பொன்னாலை பகுதியிலும் விஜயகாந்துக்கு கண்ணீர் அஞ்சலி பதாகைகள் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பணத்திற்காக பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்திய ஐஸ் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் 9 பேர் கைது



பணத்திற்காக பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தி ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 'மாமா' என்று அழைக்கப்படும் பிரதான சந்தேக நபர் உட்பட 9 பேர் கல்கிஸை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சோதனையின் போது 4 இளம் பெண்கள் மற்றும் 4 ஆண்கள் ஐஸ் போதைப்பொருள் மற்றும் அதனைபருகதேவையான பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளம்பெண்களுக்கு போதைப்பொருள் கொடுத்து அவர்களை பணத்திற்காக விபச்சாரத்தில் ஈடுபடுத்தி வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டை மேலும் சோதனையிட்ட போது ஐஸ் போதைப் பொருள்களை பொதி செய்ய தேவையான பொலித்தீன் பைக்கறுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நுவரெலியா கந்தப்பளையில் அடை மழை; வீடுகள், விவசாய நிலங்கள் கடும் பாதிப்பு

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக நுவரெலியா கந்தப்பளை பகுதியில் அதிக தாழ் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதுடன், பல ஏக்கர் விவசாய நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில் புதன்கிழமை இரவு பெய்த கடும் மழை காரணமாக உடப்புசல்லாவ - நுவரெலியா ஊடான போக்கு-வரத்து தடைப்பட்டது.

அத்துடன், கந்தப்பளை கோர்ட்லோட்ஜ் சந்தியில் பிரதான வீதிக்கு மேலாக வெள்ளநீர் போவதால் போக்குவரத்து தடைப்பட்டதுடன் சில வீதிகள் சேதமடைந்துள்ளன. சில பிரதான வீதி பகுதிகளில் முற்றாக வெள்ளம் சூழ்ந்துள்ளதால் வீதி அருகில் உள்ள வடிகான்களை அவதானிக்க முடியாத நிலையில் மக்கள் விபத்தை எதிர்கொள்ளும் நிலையும் உருவாகியுள்ளது

குறிப்பாக உடப்புசல்லாவ , ராகலை , கந்தப்பளை நகரில் இருந்து நுவரெலியாவிற்கு செல்லும் பாடசாலைமாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஏனைய அரச திணைக்களங்களுக்கு அன்றாடம்தங்களின்சேவையை பெறச் செல்லும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அத்துடன்,நுவரெலியாபிரதேச செயலகத்திற்குட்பட்ட கந்தபளை பகுதிகளில் சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

மரக்கறி தோட்டங்களில் வெள்ளம் பாய்ந்தோடியதால் இப்பாதிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கால்வாய்கள் முறையாக பராமரிக்கப்படாததன் காரணமாக வெள்ளம் ஏற்பட்டு இந்த விவசாய காணிகள் மூழ்குவதற்கு முக்கிய காரணம் என விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர். (05)

# மகள் மீது பலாத்காரம் பொலிஸ் தந்தை கைது

*மனைவியை தாக்கி விட்டு 13 வயது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்டவர் அநுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தராவார்.*

*மனைவியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்-யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகப் பொலி-ஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)*

# 3 சந்தேகநபர்கள் கொழும்பில் கைது

தங்க நகைகள் மற்றும் ஓட்டோ திருட்டுச்; சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலி-ஸார் தெரிவித்தனர்.

புதன்கிழமை இரவு, புறக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செட்டியார்தெரு பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த புறக்கோட்டை பொலிஸார், தங்க நகைகளை விற்பனை செய்ய வந்திருந்த நிலையிலேயே சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்துள்ளனர்.

23, 29 மற்றும் 32 வயதுடைய எகொடஉயன மற்றும் மித்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, களுத்துறை வடக்கு, தெற்கு, கம்பஹா ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இவர்கள் திருட்டுக்களில் ஈடுபட்டமை தெரிய வந்துள்ளது.

எம்பிலிபிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சாரதியை தாக்கி ஓட்டோவை சந்தேக நபர்கள் கொள்ளையிட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# 800 இற்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்

இந்தவருடத்தில்மாத்திரம்800 இற்கும்மேற்பட்ட பல்கலைக்கழக பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் எனப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கசம்மேளனம்தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்க கருத்துத் தெரிவிக்கையில் -

சுமார் 1000 பேராசிரியர்கள் வெளிநாடுகளில் விடுமுறையில் உள்ளனர். இதனால் பல்கலைக் கழகநடவடிக்கைகளுக்குப்பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (05)



# குடு ரொானின் ரூ. 55 மில்லியன் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டன

பிரபல போதைப்பொருள் வியாபாரி குடு ரொானுக்குச் சொந்தமான சுமார் 55 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஜா-எல பிரதேசத்தில் காணி ஒன்றும் சொகுசு ஜீப் வண்டியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# கடலில் நீராடுகையில் மூழ்கிய மாணவன் சடலமாக மீட்பு

மாரவில -முத்துகடுவ பிரதேசத்தில் கடலில் நீராடச் சென்று காணாமல் போன பாடசாலை மாணவன் சடலமாக வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளான்.

பிரதேச மீனவர்களால் காணாமல் போன இடத்திலேயே சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளார்.

மாரவில - முத்துகடுவ பிரதேசத்தில் வசித்து வந்த நிசன்சலா புஷ்பகுமார (வயது 16) என்ற பாடசாலை மாணவனே உயிரிழந்துள்ளார்.

புதன்கிழமை மாலை 5.45 மணியளவில் மாரவில -முத்துகடுவ பிரதேசத்தில் நான்கு பாடசாலை மாணவர்கள் கடலில் நீராடச் சென்றுள்ளனர். இந்நிலையிலேயே இந்த மாணவன் காணாமல்போன நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான். (05)

# மரம் வீழ்ந்து இரு பெண் தொழிலாளர்கள் காயம்

## நோர்வூட்டில் சம்பவம்

நோர்வூட் பகுதியில் வியாழக்கிழமை தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர்கள் இருவர் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் பலத்த காயமடைந்து டிக்கோயா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

மத்திய மலையகத்தின் மேற்குப் பகுதிகளில் பலத்த காற்று வீசி வருகிறது. இந்நிலையில் வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தோட்டத் தொழிலாளர்கள் மீது மரம் ஒன்று வீழ்ந்ததாக தோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இரண்டு பெண்கள் காயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (05)

# சிறைச்சாலைகளில் பெரும் இடநெருக்கடி

## விஜயதாஸ தகவல்



*நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் விசேட நடவடிக்கையின் போது பலரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுவருவதால் தற்போது சிறைச்சாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலை விவகாரங்கள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -*

*நாடளாவிய ரீதியில் முப்படைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் யுக்திய நடவடிக்கையின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்படும்கைதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதன் காரணமாக சிறைச்சாலைகளில் தற்போது இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நாடு முழுவதும் உள்ள 28 சிறைச்சாலைகளிலும் 2, 255 இற்கும் அதிகமான புதிய கைதிகள்சிறைப்படுத்தப்பட்டுள்ளனர்.*

*இந்தநடவடிக்கைஆரம்பிக்க முன்பதாக சிறைச்சாலைகளில் 28 ஆயிரம் கைதிகளே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். பொதுவாக இந்த நாட்டில் சிறைச்சாலைகளில் 11,000 பேரைத் தடுத்துவைக்க முடியும்.*

*அதேநேரம் பெண்கைதிகளின் எண்ணிக்கையும்800இல்இருந்து 1,124 வரை அதிகரித்திருக்கிறது. அத்துடன் சிறைச்சாலைகளின் நெருக்கடிக்கு நீண்டகாலத் தீர்வாக மில்லனிய பிரதேசத்தில் 50 ஏக்கர் காணி தெரிவுசெய்து அங்கு கட்டடங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.*

*என்றாலும் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு அரசுக்கு சொந்தமான பயன்படுத்தாமல் இருக்கும் பாதுகாப்பான கட்டடங்களைத் தெரிவுசெய்து, சிறைச்சாலைகளில் இருக்கும் மேலதிக கைதிகளை குறித்த கட்டடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)*

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இன்னும் எத்தனை காலத்திற்கு இந்த அவலம் தொடரப்போகிறது?

பொருளாதாரநெருக்கடிகாரணமாகஇலங்கையில் குடும்பங்களின் மாத வருமானம் 60.5 வீதத்தால் குறைந்துள்ளதாக சமீபத்திய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும்புள்ளிவிபரத்திணைக்களம்அறிவித்துள்ளமை அதிர்ச்சியளிக்கின்றது. 91வீதமான குடும்பங்களின் சராசரி மாதச் செலவு அதிகரித்துள்ளதாகவும் திணைக்களம் கூறுகின்றது. ஆனால் வருமானம் மட்டும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்தநிலமைஇன்னும்எத்தனைஆண்டுகளுக்கு நீடிக்கப்போகின்றது என்கிற கேள்வி மலைப்பை ஏற்படுத்துகின்றது. நடுத்தர வருமானத்தைக் கொண்ட ஒரு நாட்டு மக்களின் 60 சதவீத வருமானம் வீழ்ச்சியடைகின்றது என்றால்பெரும்பாலானவர்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதே பொருள். அவர்களை இந்த நிலையில் இருந்து மீட்பதற்கும் தொழிற்றுறைகளை வளர்ப்பதற்கும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்குமான நம்பிக்கைக்குரிய நடவடிக்கைகள் எவற்றையும் காணவில்லை என்பது ஏற்படும் மலைப்பை இரட்டிப்பாக்குகின்றது.

வருமானம் குறைந்துள்ள குடும்பங்களில் 73.6 சதவீதம் பேர் அதனை ஈடுசெய்வதற்கு எந்த நடவடிக்கையும்எடுக்கவில்லைஎன்றும், 6.6சதவீதம் பேர் கூடுதல் வருமானம் அல்லது கூடுதல் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. வருமானம் குறைந்துள்ள குடும்பங்கள் தம்மைக் காக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் கடன் வாங்குதல், நகைகளை அடமானம் வைப்பது மற்றும் பிறரிடம் உணவு அல்லது பணம் கேட்பது ஆகியவை அடங்கும். அதாவது இருக்கும் சேமிப்புக்களையும் அவர்கள் கரைத்து வருகின்றார்கள். இது எவ்வளவு காலத்திற்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய உத்தி என்பது தெரியவில்லை.

மாதாந்தசெலவுகள்அதிகரித்துள்ளகுடும்பங்களில் உணவுச் செலவு 99.1 வீதமும், போக்குவரத்துக் கட்டணம் 83 வீதமும் அதிகரித்துள்ளதாம். பொருளாதாரநெருக்கடிகாரணமாகஇலங்கையில்22 வீதமான குடும்பங்கள் கடன் சுமையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வழக்கம்போல் பொருளாதாரப் பாதிப்பு முதலில் கல்வியிலேயே தாக்கத்தைச் செலுத்தும். அதற்கேற்பபொருளாதாரநெருக்கடியால் 3 வயது முதல் 21 வயதுக்குட்பட்டவர்களில் 54.9 சதவீதத்தினரின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் எதிர்காலத்தையே பாதிக்கப்போகின்றது.

பல்கலைக்கழகக் கல்வியை வியாபாரமாக்குவது குறித்துப் பேசும் அரசுத் தலைவரும் ஆளும் கட்சியினரும் இது குறித்து அக்கறை செலுத்தி கல்வி பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு உதவுவதற்கான திட்டங்கள் மீது கவனம் செலுத்தியதாகவும் தெரியவில்லை. நிலமை படுமோசமாவதற்குள் இவை குறித்து கவனம் செலுத்தப்படவேண்டியது அவசியம்.

பொருளாதாரம் மீண்டு வருகிறது, அடுத்த ஆண்டில் வங்குரோத்து நிலையிலிருந்து நாடு வெளியே வந்துவிடும் 2023 அரச வருமானம் எதிர்பார்த்ததைவிட அதிகரித்துள்ளது என்றெல்லாம் அரசுஎன்னதான்பரப்புரைசெய்தாலும்களயதார்த்தம் அதற்கு எதிர்மாறானதாகவே இருக்கின்றது. இந்த நிலை இன்னும் எத்தனை காலத்திற்கு நீடிக்கும், அதனை எப்படிப் பொதுமக்கள் தாக்குப் பிடிக்கப் போகின்றனர் என்பதுதான் எம்முன் உள்ள பெரும் கேள்வி.

## பாலஸ்தீனியருக்கான ஐ.நா. மனித உரிமை குழுவின் தலைவராக

# சிறிலங்காவுக்கு தகுதி இருக்கிறதா?



ச. வி. கிருபாகரன், பிரான்ஸ்



கோழிக் கூட்டிற்கு நரியை காவலாக வைத்தால், ஒவ்வொரு இரவு உணவிற்கும் கோழி சாப்பிடுவீர்கள். - யூஜின் ஆலன் ஹேக்மேன் (ஜான் ஹெரோட்). இன்று இஸ்ரேலிய ஹமாஸ் மோதலைப்பார்ப்பவர்களில் சிலர், அதை உலகிலேயே மோசமான போராகக் கருதுகின்றனர். பலர் சர்வதேச அளவில் நடக்கும் சில உண்மைகளை உணராமல் இரு தரப்பினர் மீதும் பழி சுமத்துகிறார்கள்.

ஒக்டோபர் 7 இஸ்ரேலியர்கள் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல் தற்போதைய மோதலின் ஆரம்பம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இச் சம்பவம்

இஸ்ரேலிய-பாலஸ்தீனி-



யர்களுக்கான மோதலின் ஆரம்பம் அல்ல. 1948இல் இஸ்ரேல் உருவானதிலிருந்து இச் சர்ச்சை தொடர்கிறது. ஆனால் நாளுக்கு நாள் நிலைமை மோசமாகி வருகிறது.

இந்தப் போருக்கான மூல காரணம், வரலாறு போன்றவற்றை மட்டும் ஆய்வு செய்வதனால் எந்தப் பலனும் கிடைக்க போவதில்லை. இந்த மோதல் நீடிப்பதற்கான காரணங்களை, பலநாடுகள் முன்னின்று செய்வது பற்றி இன்று எத்தனை ஆய்வு நடைபெற்றுள்ளன?

சர்வதேச அளவில், பல நாடுகள் கவலையடைகின்றன. பல சர்வதேச விசாரணைகள் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக அல்லது அதற்கும் மேலாக நடைபெற்றுவருகின்றன. யூதமக்களின் சாம்பலாலில்தான் ஐக்கிய நாடுகள் சபை - ஐ.நா. நிறுவப்பட்டது என்று இஸ்ரேலியர்கள் எப்போதும் கூறுகின்றனர். ஐ.நா. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், 1945இல் நிறுவப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வேறு சில சர்வதேச அமைப்புகள், ஐ.நா. உருவாகுவதற்கு முன்னரே இருந்துள்ளன, சில இன்னும் உள்ளன.

உதாரணத்திற்கு - 1889இல் சர்வதேச நாடாளுமன்ற பிரதிநிதிகளின் ஒன்றியம் (Inter-Parliamentary Union - IPU)

தேசங்களின் கழகம் (League of Nations); 1899இல் நடைபெற்ற ஹேக் மாநாடு நிரந்தர நடுவர் நீதி மன்றம் சர்வதேச தகராறுகளுக்கான பசிபிக் தீர்வுக்கான மாநாடு (Hague Conferences held in 1899 - Permanent Court of Arbitration) போன்று பல நிறுவனங்கள் திகழ்தன, திகழுகின்றன.

இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல் தொடர்பாக ஐ.நாவைப் பொறுத்தவரையில், பல விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஆனால் எதுவும்பாலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையிலனா சமாதானத்தையோ நல்லிணக்கத்தையோ ஏற்படுத்தவில்லை.

இப்போது சிறிலங்காவின் வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் நிலைமையைசுருக்கமாகஆராய்வோம். 1948இல் சிறிலங்கா



சுதந்திரம் பெற்றதிலிருந்து,

வடக்கு கிழக்கில் நடப்பவை, இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலில் இருந்து வேறுபட்டதல்ல.

தமிழர் மனித உரிமைகள் மையம்- TCHR 2001இல் பாலஸ்தீனியர்களுக்கும்தமிழர்களுக்கும் இடையேயான ஒரு ஒப்பீட்டை செய்து பிரசுரித்திருந்தோம். ஆவ்வேளையில் இவ் ஒப்பீடு கல்விமான்கள், புத்திஜீவிகள், ராஜதந்திரிகள், மற்றும் பல ஐ.நாவின் முக்கிய புள்ளிகள் அவற்றை ஏற்றுகொண்டனர்.

### சிறிலங்கா-இஸ்ரேல்

1948 ஆம் ஆண்டிலிருந்து, இஸ்ரேலுக்கும்சிறிலங்காவிற்கும் இடையிலான உறவுகள் பல ஏற்ற இறக்கங்களைக் கொண்டிருந்தன. இவ்விரு நாடுகளிற்கு இடையிலான உறவு, ஒருபோதும் நிலையானதாகவோ அல்லது சுமூகமாகவோ இருந்தது கிடையாது.

எவ்வாறாயினும், 70களின் பிற்பகுதியில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை மீண்டும் நிறுவினார். அவர்களின் புலனாய்வு சேவையான மொசாட், கிழக்கு மாகாணம் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் உள்ள முக்கியமான பகுதிகளில் சிங்கள விவசாயிகளை குடியேற்றுவதற்கான சிறந்த உத்தியாக, மகாவலி அபிவிருத்தியைத் துரிதப்படுத்துமாறு சிறிலங்காக்கு ஆலோசனை வழங்கியது.

இதற்கிடையில், மகாவலி குடியேற்றங்களுக்கான நிதியுதவிக்காக, மொசாட் சர்வதேச அளவில் பணியாற்றியது. இந்தத் திட்டத்துடன் இணைக்கப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்கள் இஸ்ரேலில் உள்ள மிகப்பெரிய கட்டுமான மற்றும் சிவில் இன்ஜினியரிங் நிறுவனமான, சோலெல் போனேக்கு வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இஸ்ரேலினால் இந்த உதவி மேற்கொள்ளப்பட்டது.

பெப்ரவரி 2020இல், இஸ்ரேல் சிறிலங்காவிற்கு விவசாயம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட திட்டங்களை வழங்கியது. துரத்தப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் இவை

(5ஆம் பக்கம் பார்க்க..)

# சிறிலங்காவுக்கு தகுதி இருக்கிறதா?.........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஜனாதி பதியின் சகோதரர் மஹிந்த ராஜபசா பாலஸ்தீனியர்களின் ஆதரவாளராக அறியப்பட்ட பொழுதிலும் இஸ்ரேலின் உதவி கோட்டாவுக்குக் கிடைத்தது, பாலஸ்தீனிய ஆதரவு என்பது சொல்ளளவிலேயே என்பது இங்கு நிருபிக்கப்பட்டது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான தற்போதைய மோதலில், சிறிலங்கா வெளியுறவு அமைச்சு இஸ்ரேல் மற்றும் காசா ஆகிய இரு நாடுகளிலும் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து கவலை தெரிவித்த அதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒக்டோபர் 7 ஹமாஸ் தாக்குதலை உடனடியாகவே கண்டித்திருந்தார். இஸ்ரேலை விமர்சிப்பது என்பது ஹமாஸுக்கு எதிரான தாக்குதல்களை நியாயப்படுத்துவதாகக் கருத்தில் கொள்ளமுடியாது எனவும் கூறியிருந்தார்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்திய சரியாக ஒரு மாதத்திற்குப் பின்னர், நவம்பர் 7, இஸ்ரேலும் சிறிலங்காவும் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன் மூலம் இஸ்ரேல் சிறிலங்காவிலிருந்து பத்தாயிரம் (10,000) விவசாயத் தொழிலாளர்களை தனது நாட்டில் வேலைக்கு அமர்த்த முடியும். இது இஸ்ரேலில் இருந்து தடை செய்யப்பட்ட 20,000 பாலஸ்தீனிய தொழிலாளர்களுக்கான பிரதியிடாக நம்பப் படுகிறது.

தற்போதைய மோதலில், இதுவரை இஸ்ரேலிய இறப்பு எண்ணிக்கை சுமார் 1,400. இன்றுவரை இறந்த 12,000 க்கும் அதிகமான பாலஸ்தீனியர்களில், 40 சதவீதத்திற்கும் அதிகமானோர், கர்ப்பிணிப் பெண்களும் குழந்தைகளுமாகவே காணப்படுகின்றனர். இதேவேளை, இஸ்ரேலிய பணயக்கைதிகளின் நிலையை யாரும் அலட்சியம் செய்யமுடியாது.

### மருத்துவமனைகள் மீது குண்டு

முள்ளிவாய்க்கால் போரின்போது மருத்துவமனைகள் மீது குண்டுகள் வீசப்பட்ட வேளையில், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் உட்பட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இவ்வேளையில் இந்த சர்வதேச சமூகம் எங்கு சென்றது? முள்ளிவாய்க்காலில் எறிகணை அடித்தும், குண்டுகளை வீசியும் பொதுமக்களைக் கொன்ற அதே சிறிலங்காவின் பௌத்த சிங்கள தலைவர்கள், இப்பொழுது காஸாவில் பாலஸ்தீன மக்கள் மீதான போரை நிறுத்துமாறு குரல் கொடுக்கின்றனர், ஆர்பாட்டம் செய்கின்றனர். இதை தான் சொல்வது 'கபட' நாடகமென.

போர்க் காலத்தில். இரண்டு வெளியுறவு அமைச்சர்கள் – பிரான்சின் பெர்னாட் குஷ்னர் மற்றும் இங்கிலாந்தின் மில்லிபேண்ட் ஆகியோர் சிறிலங்காவிற்கு சென்று மகிந்த ராஜபக்சவிடம் போர் நிறுத்தம் செய்து, பேச்சு மூலம் ஓர் அரசியல் தீர்வை காணுமாறு வேண்டுகோள் விடுத்தபொழுது, ராஜபக்சே பிடிவாதமாக மறுத்து, போரை தொடர்ந்தார் என்பது சரித்திரம்.

மகிந்த ராஜபக்ச ஜனதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்ததும், சில புலம்பெயர் சிங்களவர்களைப் பணியில் சேர்த்தார். சிறிலங்காவின் வெளிநாட்டு அமைச்சின் ராஜதந்திரிகளுடன் ஒப்பிடும்பொழுது, இவர்களுக்கு நல்ல ஊதியம் மற்றும் நல்ல சலுகைகள் வழங்கப்பட்டன. சிலர் ஜெனீவா, நியூயோர்க் மற்றும் பிற இடங்களில் தூதுவர்களாக நியமிக்கப்பட்டனர். இந்தத் தூதுவர்கள் சர்வதேச மட்டத்தில் கல்வியாளர்கள் குழுவுடன் இணைந்து சிறிலங்காவில் நடந்த போர் குறித்து தவறான தகவல்களைப் பரப்பி வந்தனர்.

உதாரணமாக தயான் ஜயதிலகா, பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க, மொஹான் பீரிஸ், ரொஹான் பெரேரா மற்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க ஆகியோர், சிறிலங்காவில்நடந்த கொண்டிருந்த போரின் உண்மையைப் பேசிய வெளிநாட்டு பிரமுகர்களை, ஏதோ ஒரு வழியில் ஓரம் கட்டுவதற்கும், இழிவுபடுத்துவதற்கும் சிறில0ங்காவினால் அனுமதி வழங்கப்பட்டடிருந்தது.

பேராசிரியர் ராஜீவ விஜேசிங்கே ஒரு சந்தர்ப்பத்தில், ஐ.நாவில் கூறியதாவது, இடம் பெயர்ந்த தமிழ் மக்களிடையே, நீல நிறக் கண்கள் கொண்ட குழந்தைகள் இருந்தனர், அதாவது இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிறப்பாக செயல்பட்டனர் என்பது தெளிவாகிறது என முழுத் தமிழர்களையுமே இழிவுபடுத்தியிருந்தார். மேலும் ஒரு பக்க நிகழ்வில், உரையாற்றிய பேராசிரியர் ராஜீவ விஜேசிங்கே, சிறிலங்காவில் ஆயுத கலாச்சாரத்தை உண்டு பண்ணியவர்கள், தென்னிலங்கை சிங்கள இளைஞர்களே. என்றும் குறிப்பிட்டார். இவர் இதை கூறியதை அடுத்து

அங்கு பிரசன்னமாகியிருந்த மற்றைய சிறிலங்காவின் பிரதிநிதிகளிற்கு, இவர் மீது கடும் கோபம் ஏற்பட்டது.

### ஐநா சிறப்புக் குழு

பாலஸ்தீன மக்கள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களின் பிற அரேபியர்களின் மனித உரிமைகளை பாதிக்கும் இஸ்ரேலிய நடைமுறைகளை விசாரிக்கும் ஐ.நா. சிறப்புக் குழு ரீளீனூனூஊண, கடந்த சில வருடங்களாக சிறிலங்காவின் பிரதிநிதிகளால் தலைமை தாங்கப்பட்டு வருகிறது என்பதை எத்தனை பேர் அறிவார்கள்? உதாரணத்திற்கு –மோகன் பீரிஸ், கனிஷ்க செனவிரத்னா மற்றும் அம்ரித் ரோஹான் ஆகியோர் சிறிலங்வின் பிரதிநிதிகள்.

சிறிலங்காவில் நடைபெற்ற போரின்போது, இவர்களது அறிக்கைகளை யாரும் படித்து பார்த்தால், இந்த சிறிலங்கா பிரதிநிதிகள், ஆயுத மோதல்களைக் கையாளும் எந்தக் குழுவிலும், எந்த நாட்டிற்கும் அங்கம் வகிக்கும் தகுதியற்றவர்கள் என்பது தெளிவாகும்.

மொஹாகன் பீரிஸ், சிறிலங்காவிலும், வெளிநாட்டிலும் பதவிகளுக்குப் பேராசை கொண்டவர். சிறிலங்காவில் நிறைவேற்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவியை தவிர அனைத்து உயர் பதவிகளையும் வகித்தார்.

மொஹான் பீரிஸ், சட்ட மாஅதிபராகவும், பிரதம நீதியரசராகவும் இருந்தபோது, நிறைவேற்று ஜனாதிபதிக்கு இணையான அனைத்தையும் அனுபவித்தார். இப்போதுநியூயார்க்கில் உள்ள ஐ.நா. சபையிலும் அதே கதைதான். ஐ.நா. பொதுச்செயலாளர் பதவியைத் தவிர, மற்றைய பல பதவிகளை வகித்தார், இதற்கிடையில் சில முக்கிய பதவிகளிற்கான தேர்தலும் போட்டியிட்டுப் படுதோல்வியும் அடைந்தார்.

மிக முக்கியமான விடயம் என்னவென்றால், மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசராக இருந்தபோது, சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர், சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் நிறுவனம் (னுாயபுகூஷியூனுா) ஆகியவற்றால் எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

அவர்கள் கூறியதாவது, பீரிஸ் கடந்த ஐந்து ஆண்டுகளில் பல முக்கியமான பதவிகளை வகித்துள்ளார், மிகச் சமீபத்தில், சட்டமா அதிபர் மற்றும் அமைச்சரவையின் சட்ட ஆலோசகர் பதவிகளையும் வகித்தார். அவர் தனது புதிய பதவிக்கு ஜனாதிபதியின் அனுசரணைக்கு கடமைபட்டுள்ளார் என்பதனால் நாட்டிற்குள் நீதித்துறை சுதந்திரத்தை மேலும் பாதிக்கிறது."

### தேர்ந்தெடுக்கப்பட்ட மன்னிப்பு

பீரிஸ் 18 டிசெம்பர் 2008 அன்று சட்ட மா அதிபராக நியமிக்கப்பட்டார். முன்னாள் பிரதியமைச்சர் சந்தன கத்ரியாராச்சிக்கு எதிரான வழக்கின் கொலைக் குற்றச்சாட்டை அவர் வாபஸ் பெற்றுக்கொண்டதோடு, மேலும், அரச கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவினால், சிறிலங்கா அரசியல்வாதி பரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் சிறிலங்கா உயர் நீதிமன்றத்தால்தூக்குத்தண்டனைவிதிக்கப்பட்டவருக்குப் பொது மன்னிப்பு வழங்க இடமளித்தார்.

2011ஆம் ஆண்டு சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. குழுவில், சிறிலங்கா சார்பில் மொஹான் பீரிஸ் கலந்துகொண்டார். அதில், காணாமல்போன லங்கா ஈநியூஸ் (ஸிழிஜவழிசிஜளழவி) கார்ட்டூனிஸ்ட் பிரகீத் எக்னெலிகொட வெளிநாட்டில் வசிப்பதாக சிறிலங்கா அரசுக்கு புலனாய்வுத் தகவல் கிடைத்துள்ளதாக கூறியிருந்தார். இருப்பினும், உள்ளூர் நீதிமன்றத்தால் இவரிடம் இதுபற்றி வினாவிய பொழுது, தான் பொய் சொன்னார் என்று ஒப்புக்கொண்டார்.

இதேபோன்றே குண்டுவீச்சு, எறிகணை வீச்சு, சிசுக்கள் உட்பட அப்பாவி பொதுமக் கள் கொலை என்று எல்லாவற்றையும் உள்நாட்டில் நியாயப்படுத்திய சிறிலங்கா பிரதிநிதிகள், இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர் பற்றிய குழுவில் அங்கம் வகித்து, இவர்களால் பாலஸ்தீனிய இஸ்ரேலிய மக்களின் அமைதிக்கும் நீதிக்கும் உழைக்க முடியுமா?

பாலஸ்தீனியர்களின் மனித உரிமைகள் -SCIIP தொடர்பான ஐ.நா. பொதுச் சபையின்

தற்போதைய தலைவராக மொஹான் பீரிஸ் கடமையாற்றுகிறார்.

இவரது மனநிலையும் அணுகுமுறையும் என்றும் குற்றங்களை நியாயப்படுத்துவதாக இருக்கும் பொழுது, இக் குழுவில் இருந்து நீதி எப்படிக் கிடைக்கும்?

ஐ.நா. பொதுச் சபையின் தலைவர் எவ்வாறு சிறிலங்காவை இக் குழுவில் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதுடன், தமிழர் பாலஸ்தீனியர்களுடைய போராட்டம் ஏறக்குறைய ஒரே மாதிரியாக காணப்படும் நிலையில், சிறிலங்காவின் பிரதிநிதிகள் இக் குழவிற்கு தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதும் ஆச்சரியத்திற்குரியது. ஐ.நா.வின் பெயரில் இது ஒரு அவலச்சுவையா என்றும் என்ன தோன்றுகிறது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நடிகர் விஜயகாந்தின் இழப்பானது தமிழக மக்களுக்கு பேரிழப்பாகும்

## செந்தில் தொண்டமான் அனுதாபம்



உடல் நலக்குறைவால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த தேமுதிக தலைவர் 'கேப்டன் விஜயகாந்த்' உயிரிழுந்த செய்தியறிந்து மிகவும் மனவேதனை அடைந்தேன்' என கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கள் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

விஜயகாந்த் மக்களுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த மனிதர். விஜயகாந்துடன் பல முறை ஏற்பட்ட சந்திப்பின் போது அவருடைய எண்ணாங்களிலும் செயல்களின் ஊடாகவும் அவர் ஒரு போற்றப்படக் வேண்டிய தலைவர் என்பதை தான் அறிந்தேன்.

எவருக்கும் அஞ்சாது மக்களுக்காக உடனுக்குடன் சேவையை செய்யும் அரசியல் தலைவன். மேலும் இலங்கை மக்கள் மீது அதீத அன்பு கொண்ட இவர். இலங்கையில் உள்ள பாமர மக்களுக்காக விளம்பர மற்ற பல உதவிகளை செய்துள்ளார்.

இவர் பாமர மக்களுக்கு விருந்தோம்பல் செய்வதில் ஈடு இணை யற்றவர். இவருடைய இழப்பு தமிழக மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும்.

நடிகர் விஜயகாந்த் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், ரசிகர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்' இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

(05)

# மாணவனைக் குறிவைத்து போதைப்பாக்கு விற்பனை

## இளைஞன் கைது

யாழில் மாணவர்களுக்கு போதைப்பாக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்தே கல்வியங்காடு பகுதியில் வைத்து குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன் போது கைது செய்யப்பட்டவரிடமிருந்து 7 கிலோகிராம் பாக்கையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த நபரை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து, மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(05)

# இறக்குமதி செய்யப்பட்ட இறைச்சியில் பன்றிக் காய்ச்சல் வைரஸ் உள்ளதாம்



சீனாவிலிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட இறைச்சிகளில் இருந்து ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சல் வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அரச கால்நடை மருத்துவர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் 'குறித்த இறைச்சிகளை அழிக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் கால்நடை வளர்ப்புத் தொழில் எதிர்காலத்தில் பெரும் நெருக்கடியை சந்திக்க நேரிடும்' என அரச கால்நடை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் சிசிர பியசிறி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(05

# கேக் விற்பனை நாட்டில் குறைவு

கேக் விற்பனை சுமார் 75 வீத மாகக் குறைந்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்தன கவலை தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மக்கள் கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இதன்காரணமாக அண்மைக்காலமாக பேக்கரித் தொழில் துறையும் சரிவைச் சந்தித்து வருகின்றது.

அந்தவகையில் கடந்த ஆண்டுகளை விட கிறிஸ்மஸ் பண்டிகையின் போது கேக் விற்பனை 75 சதவீதம் குறைந்துள்ளது. - இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் பேக்கரிகளுக்கு கிடைக்கவில்லை என்பதால் உள்ளூர் முட்டை 55 ரூபாவுக்கு வாங்கி, குறைந்த விலையில் கேக்கை விற்பனை செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் கே. ஜயவர்தன மேலும் தெரிவித்தார்.

(05)





## 72 குண்டுகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிநெடுகிலும் தொண்டர்கள், ரசிகர்கள், பொதுமக்கள் கண்ணீர் மல்க அவருக்கு பிரியாவிடை கொடுத்தனர். மக்கள் கண்ணீருடன் விடைபெற்றார் கேப்டன்.

வாகனத்தில் இருந்து விஜய காந்தின் உடலை காவல்துறையினர் சுமந்து வந்தனர். பின்னர் சரியாக மாலை 6 மணிக்கு காவல் துறையினர் விஜயகாந்தின் உடலுக்கு வணக்கம் செலுத்தி மரியாதை செய்தனர். பின்னர், 72 குண்டுகள் வான்நோக்கி சுடப்பட்டு, வாத்தியங்கள் முழங்க விஜயகாந்தின் உடலுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து விஜயகாந்தின் மகன்கள் விஜய பிரபாகரன், சண்முக பாண்டியன் மற்றும் உறவினர்கள் விஜயகாந்தின் உடலைச் சுற்றிவந்து இறுதிச் சடங்குகளைச் செய்தனர். குடும்ப வழக்கப்படியான சில சடங்குகளும் செய்யப்பட்டன. 7 மணியளவில் விஜயகாந்தின் உடல் குழியில் இறக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதிச்சடங்கில் பங்கேற்க பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்ததால், கோயம்பேட்டில் உள்ள அலுவலகத்தின் வெளியே ஆயிரக்கணக்கானோர் காத்திருந்தனர். இதனிடையே இறுதி ஊர்வத்தில் வந்த மக்கள் கூட்டமும் சேர்ந்துவிட, அந்தப்பகுதியில் கூட்டம் அதிகமானது. முன்னதாக, அலுவலகத்தின் வெளியே திரண்டிருந்த மக்கள், தங்கள் செல்போன் விளக்குகளை எரியவிட்டு விஜயகாந்துக்கு அஞ்சலி செலுத்தினர்.

## கருத்துக்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய விசேட வைத்தியர் பாலித மஹீபால தெரிவித்ததாவது:

இவ்வேலைத்திட்டம் 2024 ஜனவரி 06 சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை அருகிலுள்ள மருத்துவ நிலையங்களில் இடம்பெறவுள்ளதாகவும் இதற்காக 09 மற்றும் 15 மாதங்களுக்கிடைப்பட்ட சகலருக்கும் அம்மைத் தடுப்பு மருந்து கிடைக்கப்பெறாதிருந்தால் அவர்களுக்கு அம்மை நோய்த் தடுப்பூசியை வழங்கவுள்ளது.

அதைவிட ஜனவரி மூன்றாம் வாரம் மீண்டும் இந்நிகழ்ச்சித் திட்டத்தை நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளர், இதன் அம்மை நோயாளர்களின் எண்ணிக்கையை குறைத்து உலகளாவிய மற்றும் பிரந்திய ரீதியாக உலக சுகாதார அமைப்பினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைக்கிணங்க செயற்படுவதுடன் நமது நாட்டின் அம்மை நோயை இல்லாது செய்வதாகவும் வலியுறுத்தினார்.

இரண்டு மாத காலத்திற்குள் அம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளமையினால் பூரணமாக இல்லாது செய்வதற்கு முடியும்

இலங்கை அம்மை நோயை ஒழித்த நாடாக 2019ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பு நமது நாட்டிற்கு சான்றிதழ் வழங்கியதாகவும், அச்சான்றிதழ் பிராந்தியத்தில் 03 நாடுகளுக்கு மாத்திரம் வழங்கப்பட்டதுடன் அவற்றில் இலங்கையும் ஒன்று என்றும் செயலாளர் நினைவூட்டினார்.

உலகம் முழுவதும் நோய்த் தடுப்பு மருந்தேற்றல் நிழ்ச்சியில் நூறு நூஸ் வீதம் இலங்கை வெற்றி பெற்ற நாடு என்றும் குறிப்பிட்டார்.

## தேவையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே ஆண்டாக 2023ஆம் ஆண்டு அமைகின்றது.

2022 டிசெம்பர் மாதமாகும்போது, அதற்கு முந்தைய 18 மாதங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதியில் ஒன்று சேர்ந்து வழங்கவேண்டியிருந்த ஓய்வூதியப் நிலுவைத் தொகை உட்பட, 202 ஆம் ஆண்டு டிசெம்பர் 19 வரை, அன்றைய தினத்தில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கும் ஓய்வூதிய கொடுப்பனவுகளை முறையாக செலுத்துவதற்கு தேவையான நிதியை திறைசேரி விடுவித்துள்ளதாக நிதியமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.




## இதுவரை 18.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைக்கு அடிமையான 1,187 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகம் தெரிவித்தது.

மொனராகலை - ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடவலவ சரணாலயத்திற்கு உட்பட்ட வெஹெரகொல்ல பிரதேசத்தில் நான்கரை ஏக்கர் பரப்பளவில் வளர்ந்திருந்த கஞ்சா தோட்டம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை மேற்கொள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் 16 கிலோ மீற்றர் தூரம் காட்டுக்குள் சென்றுள்ளனர். அதிலும் இரண்டரை கிலோ மீற்றர் தூரம் நடந்தே செல்ல வேண்டி ஏற்பட்டது.

பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்ட கஞ்சா செடிகள் முற்றாக அழிக்கப்பட்டன.

மீட்கப்பட்ட தடயப்பொருட்கள் ஹம்பேகமுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட ஒருவரின் சொத்துகள் தொடர்பிலும் புத்தளம் - கற்பிட்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதன்படி, இன்று குறித்த நபரிடம் இருந்து 2 மீன்பிடிப் படகுகள், இரண்டு என்ஜின்கள், மற்றும் வேன் ஒன்றை சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட சொத்துகளின் பெறுமதி ஒரு கோடி ரூபாவை அண்மித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மீட்டியாகொட பொலிஸார் நேற்று மாலை மாதம்பே பகுதியில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 20 இலட்சம் பெறுமதியான போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

அவரிடமிருந்த 820 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 200 கிராம் கேரள கஞ்சாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் தென்னிலங்கையில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் ஒருவரின் உதவியாளர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை தடுத்து வைத்து விசாரிப்பதாக மீட்டியாகொட பொலிஸார் தெரிவித்தனர். இதனிடையே, பாணந்துறை-ஹிரண பிரதேசத்தில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(இது தொடர்பான மற்றொரு செய்தி உள்ளே)

## ஒரு குடும்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் சுமார் 1400 பில்லியன் ரூபா வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்ப்பு எவ்வாறு இருந்தாலும், வெளிவாரி, உள்ளக மற்றும் வரி விலக்கு போன்ற வரிக் கசிவு போன்ற காரணிகளால் இந்த வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம்.

இதன் காரணமாக வரி செலுத்துவோர் எண்ணிக்கையை அதிகரிக்கவும், வரி விலக்குகளைக் குறைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. ஆனாலும், மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்கள் மற்றுனம் சேவைகளுக்கான வரி விலக்குகள் நீக்கப்படவில்லை.

கல்விச் சேவைகள், மின்சாரம், சுகாதாரம், மருத்துவம், பயணிகள் போக்குவரத்து, உணவு, அனைத்து காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்பட சுமார் 90 வகையான பொருட்களுக்கு வற்வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

மேலும், நெத்தலி, பெரிய வெங்காயம், கருவாடு போன்ற சிறப்பு வர்த்தக வரி விதிக்கப்பட்டுள்ள 65 வகையான பொருட்களுக்கு வற்வரி தாக்கம் செலுத்தாத

இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக் களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜனக எதிரிசிங்க,

உள்நாட்டு விலை ஸ்திரத் தன்மையை பேணுவதே இலங்கை மத்திய வங்கியின் முதன்மையான நோக்கமாகும். இதன்படி, புதிய மத்திய வங்கிச் சட்டத்தின் மூலம், நாட்டின் பணவீக்கம் காலாண்டு அடிப்படையில் 3-7 சதவீதத்தில் பேணப்பட வேண்டுமென இலங்கை மத்திய வங்கியும் அரஷ-ம் இணைந்து வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளன. பணவீக்கத்தை 5 சதவீதமாக வைத்திருப்பதே எமது இலக்கு ஆகும். வரித் திருத்தமும் பணவீக்கத்தில் தாக்கம் செலுத்துகின்றது. பாதிக்கிறது. நவம்பர் மாதத்தில் பணவீக்கம் 3.4% ஆக பதிவாகியுள்ளது.

ஒரு குடும்பம் பொதுவாக 4 உறுப்பினர்களைக் கொண்டதாகக் கருதப்படுகிறது. சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் தகவல்படி, கடந்த நவம்பரில் ஒரு குடும்பத்தின் சராசரி மாதச் செலவு 177,687.44 ஆகப் பதிவாகியுள்ளது. அதன்படி, ஒரு சராசரி குடும்பத்தின் மொத்த செலவை 40,000 ரூபாவால் அதிகரிக்க முடியாது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இருப்பினும் மத்திய வங்கியினால் எதிர்வுகூறப்பட்டிருந்த விதம், வரி திருத்தத்திற்கு முன்னரான பணவீக்கம் தொடர்பிலான எதிர்வுகூறல்கள் மற்றும் வரி திருத்தம் தொடர்பில் கருத்துக்கள் கூறப்பட்டதன் பின்னரான எதிர்வுகூறல்களுக்கு இடையிலான வேறுபாடுகளை பார்க்கும் போது விலை அதிகரிப்புக்கு ஏற்ப எந்த அளவு பணவீக்கம் அதிகரிக்கும் என்பதையும் புரிந்துகொள்ள முடியும்.

இந்த வரி திருத்தத்தினால் 2-3 சதவீதம் வரையில் பணவீக்கம் அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்பட்டுள்ளது. இருப்பினும் பெறுமதிசேர் வரிக்கு உட்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளை நீக்கி சரியான வரிவிதிப்பை மேற்கொண்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க அவசியமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக நிதி அமைச்சும், உள்நாட்டு இறைவரித் திணைக்களமும் அறிவித்துள்ளன.

அதனால் தற்போது எதிர்வு கூறப்பட்டுள்ள விகிதம் மேலும் குறைவடைவதற்கான சாத்தியங்கள் உள்ளன. முழுமையாக பார்க்கும் போது டிஅசம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜனவரி மாதத்தில் குடும்பமொன்றின் மாதாந்த செலவு 40,000 ரூபாவாக அதிகரிக்க முடியாது. அவ்வாறான கருத்துகள் தொடர்பில் கவலை தெரிவிக்கிறோம்.

## சம்பா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என.

சம்பா அரிசிக்கான விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் சம்பா அரிசிக்கான தட்டுப்பாடு செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஹோட்டல் கட்டமைப்பு முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி வைத்தியசாலைகளுக்கும் முப்படையினருக்கும் சம்பா அரிசியே பயன்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் கீரி சம்பாவுக்கு செயற்கையான தட்டுப்பாட்டை அறிவித்து அதன் மூலம் குறித்த வகை அரிசியை மேலதிக விலைக்கு விற்கும் மாபியா உருவாக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சர், வர்த்தக அமைச்சர்கள் எங்கே உள்ளனர் என்று தெரியாதுள்ளது. அதேநேரம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கு என்ன நடந்தது என்பது கேள்வியாகவே உள்ளது என்றார்.

## தமிழர் தாயகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கூட்டுறவு மீனவர் சங்கம் மற்றும் மக்கள் சந்திப்பில் வியாழக்கிழமை கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

மூன்று தசாப்த போர் நிறைவடைந்த பின்னர் இந்தியாவின் அழுத்தம் காரணமாக தமிழ் தேசம் என்ற கோட்பாட்டை கைவிட்டு ஒற்றையாட்சியான சிங்கள பௌத்த ஆட்சிக்குள் '13'ஐ கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

'13'ஐ அமுல்படுத்துவதினால் தமிழ்தரப்பிற்கு இறுதிவரை எவ்வித நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்ற உண்மையை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சம்பந்தன் 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தடவையாக இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு '13' ஐ ஏற்றுக்கொள்வதாக எழுத்து மூலமாக வலியுறுத்தினர். 13 வலியுறுத்துவது தமிழ் தேச கோட்பாட்டை கைவிடுவதற்கு சமம்.

ஒற்றையாட்சி முறைமை சிங்கள வர்க்கத்தினருக்கு மாத்திரமே ஆட்சி அதிகாரத்தை வழங்குகிறது. இந்நாட்டில் சிங்கள மக்களின் ஆதிக்கமே அதிகளவில் காணப்படுகின்றது. எனவே சிங்கள தரப்பினர் முழு வீச்சுடன் தம் இனத்தின் வளர்ச்சிக்காகவே தங்களது பொருளாதாரத்திட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

கடந்த 75 வருடங்காலமாக வடகிழக்கு திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் அபிவிருத்தி என்ற போர்வையில் சிங்களமயப்படுத்தும் வேலைத்திட்டங்களே நிறைவேற்றப்படுகின்றன.

இன்றைய சூழலில் பொருளாதார ரீதியில் பின்னடைவை சந்தித்துள்ள அரசாங்கம் புலம்பயர் தமிழர்களின் உதவியை கோருகின்றனர். இதனை தங்களுக்கு சாதகமாக புலம்பெயர் சமூகத்தினர் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாட்டில் தமிழ் தரப்பினரால் இனப்பிரச்சினை தலைதூக்கும் என்ற நிலையிலேயே போர் நிறைவடைந்து 15 வருடத்திற்கு பின்னரும் கூட பாதுகாப்பிற்காக 15 வீதத்தை அரசு பாதீட்டில் ஒதுக்கியுள்ளது.

தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளை கைவிட்டு தாயகம் முழுவதும் சிங்களவர்களுடையது என ஏற்றுக்கொள்ளும் பட்சத்திலோ அல்லது தெற்கு எப்படி எங்களுடைய தேசமோ அதேபோல் வடகிழக்கு தமிழ் தரப்பினருடையது என சிங்கள ஆதிக்கவாதிகள் ஏற்றுக்கொள்ளும் பட்டத்திலோதான் இனப்பிரச்சினைக்கு தீர்வு கொண்டுவர முடியும்.

இறுதி முடிவினை மக்களே தீர்மானிக்கவேண்டும் என்பதே எமது நோக்கம்' என தெரிவித்தார்.

# வரித் திருத்தத்தால் மேலதிக செலவு ஏற்படும் அது சிலர் கூறுவது போல அதிகமாக இராது

## இப்படிச் சொல்கிறார் நிதி அமைச்சு ஆலோசகர்

வரி திருத்தத்தால் ஒரு குடும்பம் பெரும் செலவைச் சுமக்க நேரிடும் என்றும் சிலர் கூறுகின்றனர். வரி திருத்தம் காரணமாக சில மேலதிக செலவுகள் ஏற்படும் என்றாலும், சிலர் கூறும் அளவுக்கு அது அதிகமானதாக இருக்க மாட்டாது என்பதையும் தெரிவிக்க வேண்டும் என்று நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா தெரிவித்தார்.

'பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டம் மற்றும் அதன் தாக்கம்' என்ற தலைப்பில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சட்டத்தின் மூலம் வற் வரி விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி அது இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு சுமார் 20 வருடங்கள் கடந்துள்ளன. ஆரம்ப கட்டத்தில், வற் இரண்டு விகிதங்களாக இருந்தது, ஆனால் பின்னர் அது மூன்று விகிதமாகத் திருத்தப்பட்டது. இவ்வகையில், அவ்வப்போது வெவ்வேறு மதிப்புகளில் இருந்த இந்த வரி விகிதம், 2019இல் செய்யப்பட்ட வரித் திருத்தங்களால் 8% ஆகக் குறைக்கப்பட்டது. இதனால் அரச வருமானம் பெருமளவு குறைந்துள்ளது. பின்னர் அது 15% ஆக உயர்த்தப்பட்டது.

கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வற் வரி திருத்தச் சட்டம் மூலம், 2024 ஜனவரி 01 முதல் வற்வரி விகிதத்தை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இனிமேலும் எம்மால் சலுகைகளை அடிப்படையாகக் கொண்டு முன்னோக்கிச் செல்வது கடினம். அரச வருமானத்தை அதிகரிக்கும் அத்தியாவசியமான காரணத்தினால் இந்த வரித் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கூறவேண்டும். இதற்குத் தேவையான பல்வேறு வரித் திருத்தங்கள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டாகும்போது வற் வரிக்காகப் பதிவு செய்யப்படும் எல்லை 15 மில்லியனாகக் காணப்பட்டது. ஆனால் 2020 ஜனவரி 1 முதல் அந்த எல்லை 300 மில்லியனாக உயர்த்தப்பட்டது. அதன் மூலம் வற் வரிக்குப் பதிவு செய்யப்பட்டிருந்த ஏராளமான வரிக் கோப்புகள் செயலிழந்தன. ஆனால் பின்னர் அது 80 மில்லியனாகக் குறைக்கப்பட்டது. புதிய திருத்தத்தின்படி 2024 ஜனவரி 1 முதல் 60 மில்லியன் ரூபாவாக மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஏராளமான வரி விலக்குகளை நீக்க புதிய திருத்தத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அரசின் இழந்த பெரும் வருமானத்தை மீட்பதே இதன் நோக்கமாகும். ஆனால் சிலர் இந்த நடவடிக்கை குறித்து தவறான கருத்துக்களை சமூகமயமாக்கி வருகின்றனர். ஜனவரி 1 முதல் வாழ்வது கடினம் என்றும், வரி திருத்தத்தால் ஒரு குடும்பம் பெரும் செலவைச் சுமக்க நேரிடும் என்றும் சிலர் கூறுகின்றனர். வரி திருத்தம் காரணமாக சில மேலதிக செலவுகள் ஏற்படும் என்றாலும், சிலர் கூறும் அளவுக்கு அது அதிகமானதாக இருக்க மாட்டாது என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

மேலும், பெறுமதி சேர் வரி உள்வாங்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளை நீக்கி, உரிய வரி திருத்தங்களைச் செய்து மக்களுக்கு நிவாரணம் வழங்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே எடுத்து வருகிறது.

எடுத்துக்காட்டாக, சில பொருட்களை இறக்குமதி செய்யும்போது துறைமுகம் மற்றும் விமான நிலைய வரி விதிக்கப்படும். வற் வரி அதிகரிப்பின் தாக்கத்தை குறைக்க அந்தப் பொருட்களில் இருந்து துறைமுகம் மற்றும் விமான நிலைய வரியை நீக்கி வற் வரியை மாத்திரம் விதிப்பது போன்ற சாதகமான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட உள்ளன என்றார்.



# குழந்தைகளுக்கு அம்மை நோய் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம்

6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு அம்மை நோயிற்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஜனவரி 6 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தனது உத்தியோகபூர்வ முகநூல் பதிவிட்டுள்ள சுகாதார மேம்பாட்டு பணியகம், குழந்தைகள் மத்தியில் அம்மை நோய் அதி களவில் பரவி வரும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் எதிர்வரும் ஜனவரி 06 ஆம் தி கதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மை நோயாளர்கள் அதிகமாக பதிவாகியுள்ள 9 மாவட்டங்களை இலக்கு வைத்து இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது,

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல் மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் தடுப்பூசி ஏற்றும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

தொற்று நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தி யை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 6 திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அருகிலுள்ள தடுப்பூசி மையங்களுக்குச் சென்று, 6 முதல் 9 மாதங்களுக்கு இடையிலான குழந்தைகளுக்கு இந்தத்; தடுப்பூசியை செலுத்திக் கொள்ளுமாறு பெற்றோருக்கு சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவுறுத்தியுள்ளது. (05)

# தேவாரம் பாடியவாறே இறையடி சேர்ந்த நபர்

## வல்வெட்டித்துறையில் சம்பவம்

ஆலயமொன்றில் தேவாரம் பாடியவாறே முதியவரொருவர் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் யாழில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், வல்வெட்டித் துறையைச் சேர்ந்த 88 வயதான சி.இராசரத்தினம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபர் தனது வீட்டுக்கு அருகில் உள்ள ஆலயத்திற்கு தினமும் சென்று தேவாரம் பாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளார். இந்நிலையில்வியாழக்கிழமைவழமை போல் ஆலயத்திற்கு சென்று தேவாரம் பாடிக்கொண்டிருந்த வேளை அவர் மயங்கி விழுந்துள்ளார்.

இதனை அடுத்து அவரை வல் வெட்டித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை, அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.(05)

# மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை குறிவைக்கும் யாழ்ப்பாணம் பொலிஸார்

யாழில் மதுபோதையில் வாகனம் செலுத்துவோரைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தில் வாகன விபத்துக்களைத் தடுக்கும் வகையிலேயே குறித்த நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும், இதன்போது மது போதையில் வாகனம் செலுத்துபவர்கள் மாத்திர மன்றி வீதிஒழுங்குகளை மீறுபவர்கள் மீதும் சட்ட நடவடிக்கைஎடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் 24 மணிநேரமும் குறித்த சோதனை நடவடிக்கை இடம்பெறும் எனவும் இதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# பொரலஸ்கமுவ பகுதியைச் சேர்ந்த கட்டட பொறியாளரைக் காணோம்

கட்டட பொறியியலாளர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக அங்குருவத்தோட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போனவர் பொரலஸ்கமுவ பிரதேசத்தை சேர்ந்த 66 வயதுடைய கட்டட பொறியியலாளர் ஆவார்.

இவர் செலுத்திச் சென்ற கெப் வண்டியொன்று அங்குருவத்தோட்ட நார்துபான பாலத்துக்கு அருகில் வைத்து பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளது.

வண்டிக்குள் இருந்து பணப்பை, மடிக்கணினி மற்றும் துணி வகைகள் ஆகியன பொலி- ஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இவரது மனைவி இது தொடர்பில் பொரலஸ்கமுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளமை விசாரணையில்தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பாணந்துறைகுற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மே ற்கொண்டு வருகின்றனர்.

(05)

# மதுபான விலைகள் 2024இல் எகிறுகிறது

2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் டி.சி.எஸ்.எல். நிறுவனமானது தனது மதுபானங்களில் விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளது.

அதன்படி, 750 மில்லிலீற்றர் மதுபான போத்தல் 90 ரூபாவாலும், 375 மில்லிலீற்றர் மதுபான போத்தல் 50 ரூபாவாலும் மற்றும் 180 மில்லி லீற்றர் மதுபான போத்தல் 20 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

அரசாங்கத்தின் வற் வரி அதிகரிப்பிற்கு அமைவாக இவ்வாறு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக டி.சி.எஸ்.எல். நிறுவனம் தெரிவித்துள்ளது. (05)

# நுளம்புக்கு புகைபோட முற்பட்டவர் மல்லாகத்தில் பரிதாபகரமாகச் சாவு

யாழில் நுளம்பு பரவுவதைத் கட்டுப்படுத்த புகை போட்ட நபரொருவர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - மல்லாகம் பகுதியை 75 வய்தான நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபர் கடந்த 19 ஆம் திகதி நுளம்புக்கு புகைப்போட, புகை சட்டிக்கு மண்ணெண்ணெய் ஊற்றி தீ பற்ற வைக்க முற்பட்டுள்ளார். இதன்போது எதிர்பாராத விதமாக தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் , தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையிலேயே புதன்கிழமை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (05)




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஓட்டோ கட்டணங்களால் ஓடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

காலைக்கதிர் Kalaikkathir

# வற் வரி தொடர்பில் நிதியமைச்சு வெளியிட்டுள்ள விசேட தகவல்

பெறுமதி சேர் வரி உள்வாங்கப்பட்டுள்ள பொருள்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளை நீக்கி, வற் வரி திருத்தத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா தெரிவித்தார்.

பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டம் மற்றும் அதன் தாக்கம் என்ற தலைப்பில் ஜனாதிபதி ஊடக மையத்தில் விசேட ஊடக சந்திப்பொன்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய நிதி அமைச்சின்வரிக்கொள்கைஆலோசகர்தனுஜா பெரேரா, பொருளாதாரம் தொடர்பான விசேட அறிவுள்ள ஒரு சிலர் கூட ஜனவரி முதலாம் திகதி முதல் வற் வரி அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் ஒரு குடும்பத்தின் மாதாந்தச் செலவு மேலும் 40,000 ரூபாவால் அதிகரிக்கும் என்ற கருத்தைக் கூட சமூகமயப்படுத்துவதாகத் தெரிவித்துள்ளனர்.

கல்விச் சேவைகள், மின்சாரம், சுகாதாரம், மருத்துவம், பயணிகள் போக்குவரத்து, அனைத்து காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்பட ஏறக்குறைய 90 வகையான பொருள்களுக்கு வற் இல் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



மேலும், சிறப்பு வர்த்தக வரி விதிக்கப்பட்டுள்ள 65 வகையான பொருள்களுக்கு வற்; விதிக்கப்படாது என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வரித் திருத்தங்களால் 8 விதமாக வற் குறைக்கப்பட்டது. இதனால் அரச வருமானம் பெருமளவு குறைந்துள்ளது.

பின்னர் அது 15 வீதமாக ஆக உயர்த்தப்பட்டது. 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் ஏயுவு விகிதத்தை 15 வீதத்திலிருந்து 18 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இனிமேலும் எம்மால் சலுகைகளை அடிப்படையாகக் கொண்டு முன்னோக்கிச் செல்வது கடினமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரச வருமானத்தை அதிகரிக்கும் அத்தியாவசியமான காரணத்தால் இந்த வரித் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும் இதற்குத் தேவையான பல்வேறு வரித் திருத்தங்கள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

ஏராளமான வரி விலக்குகளை நீக்க புதிய திருத்தத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்றும் அரசாங்கம் இழந்த பெரும் வருமானத்தை மீட்பதே இதன் நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

## பொலிஸ் விசேட சுற்றிவளைப்புகளில் நாடுமுழுவதும் 17 ஆயிரம் பேர் கைது

### 450 கிலோவுக்கும் அதிக போதைப் பொருள்களும் பறிமுதல்

போதைப்பொருள் மற்றும் பாதாளக்குழுக்களை ஒடுக்கும் யுக்திய பொலிஸ் விசேட சுற்றிவளைப்புகளில் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் நாடளாவிய ரீதியில் 17 ஆயிரத்து 837 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே ஹெரோயின், ஐஸ் உட்பட 450 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களை ஒடுக்கும் யுக்திய பொலிஸ் விசேட வேலைத்திட்டம் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரைக்கு அமைய, முப்படைகளின் ஒத்துழைப்புகளுடன் நாடளாவிய ரீதியில் கடந்த 17 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கடந்த 17 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையான ஒரு வார காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 17,666 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இருப்பினும், நத்தார் பண்டிகையை முன்னிட்டு பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டமையால் இரண்டு நாள்களுக்கு யுக்திய சுற்றிவளைப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், யுக்திய பொலிஸ் சுற்றிவளைப்புகள் கடந்த புதன்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன்போது 2,889 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அதற்கமைவாக நாடளாவிய ரீதியில் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய சுற்றிவளைப்புகளில் 17,837 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட 850 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும், 186 பேருக்கு எதிராக சட்டவிரோத சொத்து குவிப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், 1,187 சந்தேக நபர்கள் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு ஏற்கனவே சந்தேக நபர்களாக பட்டியலிடப்பட்டு தேடப்பட்டு வந்த 4,665 சந்தேக நபர்களில் 1,375 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே 10 கிலோ 510 கிராம் ஹெரோயின், 6 கிலோ 740 கிராம் ஐஸ் போதைப்பொருள், 288 கிலோ 500 கிராம் கஞ்சா, ஒரு கிலோ 70 கிராம் ஹஷீஷ் போதைப்பொருள், 35 கிலோ 800 கிராம் ஹஸ் போதைப்பொருள், 3 கிலோ 350 கிராம் தூள் போதைப்பொருள், 18 கிலோ 50 கிராம் மாவா, 71, 271 போதைப்பொருள் மாத்திரைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் 2,110,500 கஞ்சா செடிகளும் அழிக்கப்பட்டுள்ளன எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (05)

## டெங்கு நுளம்பை விரட்டும் செயற்பாடு ஊடக அமையத்தினால் முன்னெடுப்பு









யாழ் ஊடக அமையத்தின் எற்பாட்டில் டெங்கு நுளம்பை விரட்டுவோம், அதில் இருந்து மக்களைத் தெளிவூட்டுவோம் மக்களுக்காக நாம் என்னும் கருப்பொருளிலான பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் துண்டுப்பிரசுரங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.போதான வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பமானது.

மேற்படி துண்டுப்பிரசுரங்களை வழங்கும் நிகழ்வுக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி ஆரம்பித்து வைத்தார்.

இதில் யாழ். ஊடக அமையத்தின் தலைவர் து.செல்வக்குமார் மற்றும் ஊடகவியாளர்கள் கலந்துகொண்டு துண்டுப்பிரசுரங்களை வழங்கி வைத்தனர். (05)

## காசோலை மோசடியைத் தடுக்கும் சட்டத் திருத்தம் குழுவின் அறிக்கை நீதி அமைச்சரிடம் கையளிப்பு

காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களின்போது மேற்கொள்ளப்படும் மோசடிகள், முறைகேடுகள் மற்றும் புறக்கணிப்புகள் காரணமாக இலங்கையில் வர்த்தக சமூகம் மற்றும் பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, அது தொடர்பான சட்டங்களைத் தற்காலத்துக்குப் பொருத்தமான முறையில் திருத்தம் மேற்கொள்வதற்காக நீதி, சிறைச்சாலை மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவால் ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜயவர்தன தலைமையிலான நிபுணர்கள் குழுவொன்று இந்த வருடத்தின் முற்பகுதியில் நியமிக்கப்பட்டிருந்தது.

தற்போதுள்ள மாற்றுண்டியல் கட்டளைச் சட்டம் 95 வருடங்கள் பழைமை வாய்ந்த 1927ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட சட்டமாகும்.

அதன் பிரகாரம், குறித்த சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட நிபுணர்கள் குழுவால் தேசிய மற்றும் சர்வதேச சட்ட நிலைமைகள் தொடர்பாக ஆய்வுசெய்து, சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய முறை தொடர்பாக அறிக்கை ஒன்றை தயாரித்து, அதன் குழு அறிக்கை நீதி அமைச்சரிடம் கையளிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை நீதி அமைச்சில் இடம்பெற்றது.

காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், முறைகேடுகள் மற்றும் புறக்கணிப்புகள் தொடர்பாக இருக்கும் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள இந்த குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ள இருக்கிறது என நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## மாமனிதர் நடிகர் விஜயகாந்தின் இழப்பிற்கு ஈழத்தின் 'மூச்சு' படக்குழுவினர் இரங்கல்



நடிகர் விஜயகாந்தின் மரணத்திற்கு ஈழத்தின் 'மூச்சு' படக்குழுவினர் இரங்கல்களைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மூச்சு திரைப்படத்தின் இயக்குநரும்–நடிகருமான கலைஞானி குமரநாதன் அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியில்; தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு –

இயற்கை எய்திய நடிகர் புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் கலி யுக வரதனாக விளங்கியவர். ஏழைகளின் காப்பாளனாக விளங்கியவர். அவர் மறைந்தாலும் ஏழைகளினதும் இரசிகர்களினதும் மனங்களிலே நிலையாக வாழ்ந்து கொண்டிருப்பார். ஒரு கலைஞன் மரணித்தாலும் கலையினூடு அவன் வாழ்ந்துகொண்டிருக்கின்றான் என்பது நடிகர் விஜயகாந்த் மூலமாக உண்மைப் படுத்தப்பட்டி ருக்கின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் மூச்சு படக்குழு சார்பாக தெரிவித்துக்கொள்கின்றேன். – என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.12.2023இல் வெளியிடப்பெற்றது.